2008 மே 5] [திரு. தா.மோ. அன்பரசன்]

நெய்வதற்கான கூலி பாவு ஒன்றிற்கு 400 மீட்டர் ரூ.370–ம் பாவு ஒட்டுவதற்கு பாவு ஒன்றிற்கு ரூ.50–ம், பசை போடுவதற்கு பாவு ஒன்றிற்கு ரூ.20–ம் ஆக, ரூ.440 கூலியாக வழங்குவதென்று ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் 15–5–2008 முதல் நடைமுறைக்கு வருகிறது. இந்த ஒப்பந்தம் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும். மேற்படி ஒப்பந்த ஷரத்துகள் வியாபாரிகள் சங்கத் தலைவர் தரப்பிலும், மாஸ்டர் வீவர் தரப்பிலும், நெசவாளர் தரப்பிலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டிருக்கிறது. ஆக, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்பட்டு அனைத்துத் தொழிலாளர்களும் இன்றைக்கு தொழிலில் ஈடுபட்டு பிரச்சினை சுமுகமாக முடிந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிவிப்பு

(அ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகளை மறு நாள் எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் நடக்கவிருப்பதால், நேரத்தின் அருமை கருதி, இன்று எடுத்துக்கொள்ளப் பெறுவதாக இருந்த மூன்று கவன ஈர்ப்புகள் குறித்த அறிவிப்புகளில் ஒன்றை இப்போது எடுத்திருக்கிறோம். மற்ற இரண்டும்—மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு மற்றும் திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் கொடுத்த அந்த இரண்டும் நாளையதினம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) அமராவதி பிரதானக் கால்வாயில் தண்ணீர் திறந்துவிடுதல்

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒரு கவன ஈர்ப்பினை நாளை எடுத்துக்கொள்ளத் தேவையில்லை என்கிறேன். ஏனென்று கேட்டால், அவர்கள் கொடுத்த அந்தக் கவன ஈர்ப்பில் என்ன சொல்லியிருக்கிறார்களோ, அதற்கான உத்தரவினை அரசு போட்டுவிட்டது.

அதாவது, அமராவதி ஆற்றிலிருந்து பிரதானக் கால்வாயிலே தண்ணீர் விடவேண்டும், பயிர் காய்கிறது என்ற கோரிக்கை குறித்து நான் சமீபத்திலே கோயம்புத்தூருக்கு போனபோது மாண்புமிகு அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிசாமி அவர்களும், உடுமலைப்பேட்டை நகரமன்றத் தலைவர் திரு. வேலுசாமி அவர்களும், ஜெயராம கிருஷ்ணன் எங்களுடைய மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்களும் மற்றும் விவசாயிகளும் வந்து கேட்டார்கள். ஆனால், அதிலே என்ன பிரச்சினை என்று கேட்டால், கோவை மாவட்டத்தில் அமராவதி ஆற்றிலே பிரதானக் கால்வாயில் ஆகஸ்ட் 1 ஆம் தேதியிலிருந்து ஜனவரி 31 வரை தண்ணீர் விட வேண்டும். ஆனால், இப்போது நாம் மே மாதத்தில் இருக்கிறோம். அதற்காக நான் பத்திரிகைக்கு என்ன சொன்னேன் என்றால், இதுகுறித்து முதலமைச்சர் அவர்களிடம் தனியாகக் கேட்கவேண்டும், ஏனென்றால் மூன்று மாதத்திற்கு முன்னால் விடவேண்டியிருக்கிறது என்று பத்திரிகைக்கு சொன்னதாக வந்திருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டேன். எதற்காக இப்போது மூன்று மாதத்திற்கு முன்னால் தண்ணீர் கேட்கிறார்கள் என்று கேட்டார்கள். கரும்பு காய்கிறது, தென்னைக்கு உயிர்த் தண்ணீர் வேண்டுமென்று கேட்கிறார்கள் என்று சொன்னேன். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாய் உள்ளத்தோடு சொன்னார்கள், ஆகஸ்ட் மாதம் வரையிலே தண்ணீர் விடமாட்டேன் என்று பயிர் காய்கிறபோது சொல்லக்கூடாது. அணையிலே நீர் இருந்தால், உடனே திறந்துவிடுவதற்கு உத்தரவிட வேண்டுமேதவிர, அதை என்னிடத்திலே கேட்கிறேன் என்றுகூடச் சொல்லி காலதாமதம் செய்யக்கூடாது என்று கலைஞர் அவர்கள் தெரிவித்தார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அந்த உத்தரவைப் பெற்று மே மாதம் 10 முதல் 18 ஆம் தேதி வரையில் நாள் ஒன்றிற்கு 440 கன அடி வீதம் கரும்பு, தென்னைக்காகத் தண்ணீர் விடப்படும் என்ற உத்தரவை ஏற்கெனவே அரசு வழங்கிவிட்டது. எனவே, இதை எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதில் சொல்லியாகிவிட்டதல்லவா? (குறுக்கீடு) உட்காருங்கள்.